# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
# தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
# கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை – 2019 ஆகஸ்ட்

## 46 - இந்துநாகரிகம் II

## பழைய பாடத்திட்டம்

## புள்ளியிடும் திட்டம்

பரீட்சார்த்திகள் இவ்வினாத்தாளில் உள்ள பகுதி I இலிருந்து எவையேனும் இரண்டு வினாக்களையும், பகுதி II இலிருந்து எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.

**பகுதி I**

02 வினாக்களுக்கும் - 02 x 20 = 40 புள்ளிகள்

**பகுதி II**

03 வினாக்களுக்கும் - 03 x 20 = 60 புள்ளிகள்

**மொத்தம்**

05 வினாக்களுக்கும் - 40 + 60 = 100 புள்ளிகள்

**இறுதிப் புள்ளி கணக்கிடல்**

பத்திரம் I க்கு - 1 X50 புள்ளிகள்

பத்திரம் II க்கு - 100 புள்ளிகள்

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ..................................................................... ✓ △ 4/5

.....................................................................

.....................................................................

(ii) ..................................................................... ✓ △ 3/5

.....................................................................

.....................................................................

(iii) ..................................................................... ✓ △ 3/5

.....................................................................

.....................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ○ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

## கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

∘∘∘

# இந்து நாகரிகம்
## வினாத்தாள் I
## வினாத்தாளின் குறிக்கோள் பற்றிய அறிமுகம்

- முதலாம் வினாத்தாளின் குறிக்கோள் இந்து நாகரிகப் பாடத்திட்டம் தொடர்பான அடிப்படை அறிவை மாணவர்கள் அடைந்துள்ளனரா? என்பதைப் பரீட்சித்துப் பார்த்தலும் இதன் மூலம் மாணவர்களின் நினைவாற்றலை அளவிடுதலுமாகும்.

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

පැරණි නිර්දේශය/ பழைய பாடத்திட்டம்/ Old Syllabus

**OLD**

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

හින්දු ශිෂ්ටාචාරය I
இந்து நாகரிகம் I
Hindu Civilization I

46 T I

05.08.2019 / 0830 – 1030

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

- **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** இருக்கு வேதத்தில் அதிகமான பாடல்களால் போற்றப்படும் தெய்வம்
(1) விஷ்ணு (2) இந்திரன் (3) பூஷன் (4) சூரியன் (5) உஷை

**2.** வேத இலக்கிய ஆராய்ச்சியில் ஆர்வத்துடன் ஈடுபட்ட மேலைநாட்டவர்
(1) மக்ஸ் மூலர் (2) வில்சன் (3) மக்டொனல் (4) ஜகோபி (5) ஜி. யு. போப்

**3.** வேள்விக் கிரியைகளுக்குரிய விதிகளைக் கூறும் நூல்
(1) பிராமணம் (2) ஆரணியகம் (3) உபநிடதம் (4) சூத்திரங்கள் (5) பிரம்ம சூத்திரம்

**4.** உபநிடதக் கருத்துக்களைத் தொகுத்துக் கூறும் நூல்
(1) வேதாந்த சங்கிரகம் (2) வான்மீகி இராமாயணம் (3) மகாபாரதம்
(4) பிரம்ம சூத்திரம் (5) சுக்கிரநீதி

**5.** ஆத்ம விசாரணை பற்றி யமனுக்கும் நசிகேதனுக்கும் இடையே நடந்த உரையாடலை உள்ளடக்கிய உபநிடதம்
(1) சாந்தோக்கிய உபநிடதம் (2) பிருகதாரண்யக உபநிடதம் (3) தைத்திரிய உபநிடதம்
(4) ஐதரேய உபநிடதம் (5) கடோபநிடதம்

**6.** இந்து இலக்கியங்களின் வரிசையில் ஐவகை இலட்சணங்களைச் சிறப்பாகக் கொண்டுள்ள நூல்
(1) சங்கீதரத்னாகரம் (2) புராணங்கள் (3) கல்பசூத்திரம்
(4) சுக்கிரநீதி (5) மயமதம்

**7.** 'ஐந்தாம் வேதம்' என அறிஞர்களால் சிறப்பிக்கப்படும் நூல்
(1) தர்மசாத்திரங்கள் (2) நாட்டியசாஸ்திரம் (3) மகாபாரதம்
(4) சுக்கிரநீதி (5) புராணங்கள்

8. 'திரயீவித்யா' என்ற பெயரால் வழங்கப்படும் நூல்களைக் குறிக்கும் தொகுதியைத் தெரிவுசெய்க.
(1) உபநிடதம், பிரம்மசூத்திரம், பகவத்கீதை
(2) தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா
(3) இருக்கு, யசுர், சாமம்
(4) வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள்
(5) இராமாயணம், மகாபாரதம், சிவரகசியம்

9. இந்துப் பண்பாட்டம்சங்கள் பெருகிக் காணப்பட்ட மகத நாட்டின் தலைநகரம் யாது?
(1) ஒரிசா (2) அயோத்தி (3) கன்னோசி (4) பாடலிபுரம் (5) குருசேத்திரம்

10. நடராஜரை 'ஆடவல்லான்' எனப் போற்றியவர்கள் யார்?
(1) பல்லவ மன்னர்கள் (2) சோழ மன்னர்கள் (3) சாளுக்கிய மன்னர்கள்
(4) பாண்டிய மன்னர்கள் (5) விஜயநகர நாயக்க மன்னர்கள்

11. இந்துமதம் கூறும் அறுவகை பக்தியில் காதலன்-காதலி உறவைக் குறித்து நிற்பது
(1) வாத்ஸல்ய பாவனை (2) சாந்த பாவனை (3) காந்த பாவனை
(4) தாஸ்ய பாவனை (5) மதுர பாவனை

12. மகாபாரத கதாபாத்திரங்களின் பெயர்களைக் கொண்ட மலைதளிகள் அமைந்துள்ள இடம்
(1) சீயமங்கலம் (2) மாமல்லபுரம் (3) தஞ்சை
(4) திருச்சிராப்பள்ளி (5) வல்லம்

13. "நிலை பெறுமா றெண்ணுதியே..." என்ற தேவாரத்தின் மூலம் உணர்த்தப்படும் நெறி யாது?
(1) சரியை நெறி (2) கிரியை நெறி (3) யோக நெறி
(4) ஞான நெறி (5) தியான நெறி

14. கோயிற் கட்டடக்கலையுடன் தொடர்புடைய மூவகை ஆலயங்களுள் 'கேவலாலயம்' என்பது
(1) இறைவனுக்காக மாத்திரம் அமைக்கப்படும் ஆலயமாகும்.
(2) இறைவனுக்கும் தேவிக்கும் அமைக்கப்படும் ஆலயமாகும்.
(3) இறைவனுக்கும் விநாயகருக்கும் அமைக்கப்படும் ஆலயமாகும்.
(4) தேவிக்கும் பரிவார தெய்வங்களுக்கும் அமைக்கப்படும் ஆலயமாகும்.
(5) இறைவனுக்கும் பரிவார தெய்வங்களுக்கும் அமைக்கப்படும் ஆலயமாகும்.

15. 'நமசிவாய' என்ற பஞ்சாட்சர மந்திரம் முதன் முதலில் இடம்பெறுவது,
(1) பகவத்கீதையிலாகும். (2) யோகசூத்திரத்திலாகும். (3) சதருத்திரியத்திலாகும்.
(4) யோகவாசிஷ்டத்திலாகும். (5) பிரம்மசூத்திரத்திலாகும்.

16. யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினால் வெளியிடப்படும் சைவப் பத்திரிகை எது?
(1) இந்துசாதனம் (2) கோபுரம் (3) இந்துநெறி
(4) இந்துதர்மம் (5) பண்பாடு

17. குரு தத்துவத்தை உணர்த்தும் வகையில் தட்சணாமூர்த்தியின் முன்வலதுகை கொண்டு விளங்கும் முத்திரை
(1) வரத முத்திரை (2) அபய முத்திரை (3) சூசி முத்திரை
(4) கடக முத்திரை (5) சின் முத்திரை

18. ஆச்சிரம தர்மத்தில் குறிப்பிடப்படும் ஐவகைக் கடமைகளுள் 'பூதயக்ஞம்' எனப்படுவது,
(1) சிராத்த சடங்குகளாகும்.
(2) தெய்வங்களுக்குரிய யாக வழிபாடாகும்.
(3) மக்களுக்குச் செய்யப்படும் வழிபாடாகும்.
(4) விருந்தினருக்குச் செய்யப்படும் வழிபாடாகும்.
(5) உயிரினங்களின் பொருட்டு செய்யப்படும் வழிபாடாகும்.

19. பெண்களது வளமான வாழ்வு பற்றிக்கூறும் 'ஸ்திரீ கர்மாணி' என்ற மந்திரம் இடம்பெறுவது,
(1) இருக்கு வேதத்திலாகும். (2) யசுர் வேதத்திலாகும். (3) சாம வேதத்திலாகும்.
(4) அதர்வ வேதத்திலாகும். (5) மகாபாரதத்திலாகும்.

20. வறுத்த வித்து போன்று ஆணவ மலம் வலி குன்றும் நிலை எவ்வாறு அழைக்கப்படும்?
(1) சத்தினிபாத நிலை (2) இருவினையொப்பு நிலை (3) பெத்த நிலை
(4) திருவருள் நிலை (5) மலபரிபாக நிலை

21. ஆன்மாக்களின் 'சுத்தாவத்தை நிலை' என்பது
(1) இருள் நிலை (2) மருள் நிலை (3) அருள் நிலை (4) தியான நிலை (5) யோக நிலை

22. 'தர்மபூத ஞானம்' பற்றிக் குறிப்பிட்டவர் யார்?
(1) சங்கரர் (2) இராமானுஜர் (3) மத்துவர் (4) தத்துவராயர் (5) இரமணர்

23. தென்கிழக்காசிய நாடுகளில் அகத்தியர் வழிபாடு சிறப்புப் பெற்ற நாடு
(1) கம்போடியா (2) தாய்லாந்து (3) ஜாவா (4) மலேஷியா (5) பர்மா

24. 'உபநிடதக் கருத்துக்களை உள்ளடக்கி உருவாக்கபட்ட 'பிரமசூத்திரம்' என்ற நூலின் ஆசிரியர்
(1) பாதராயணர் (2) கௌடபாதர் (3) கோவிந்தர்
(4) சங்கரர் (5) நீலகண்டர்

25. 'சைவசித்தாந்தம்' என்ற சொல் முதன்முதலில் இடம்பெறுவது,
(1) திருவாசகத்திலாகும். (2) திருமந்திரத்திலாகும்.
(3) திருவிசைப்பாவிலாகும். (4) திருப்பல்லாண்டிலாகும்.
(5) திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்திலாகும்.

26. 'சிற்பக் கலைக்கூடம்' எனப் போற்றப்படும் ஆலயம்
(1) தஞ்சை பிருகதீஸ்வரர் கோயில் (2) ஸ்ரீரங்கம்
(3) மதுரை மீனாட்சியம்மன் கோயில் (4) தர்மராஜரதக் கோயில்
(5) கங்கைகொண்ட சோழேஸ்வரம்

27. முருக வழிபாட்டுடன் தொடர்புடைய ஆடல் எது?
(1) பாண்டரங்கம் (2) துணங்கை கூத்து (3) வெறியாடல்
(4) கொடுகொட்டி (5) அல்லியம்

28. பொலன்னறுவைக் காலத்தில் ஆதிக்கம் பெற்ற இந்திய மன்னர்கள் யாவர்?
(1) பல்லவர்கள் (2) சோழர்கள் (3) விஜயநகர நாயக்கர்கள்
(4) மராட்டியர்கள் (5) பாண்டியர்கள்

29. 'குமார சம்பவம்' என்னும் நூலின் ஆசிரியர் யார்?
(1) காளிதாஸர் (2) பரதர் (3) வராகமிகிரர் (4) ஜயதேவர் (5) பாரவி

30. "உலகத்தில் எழுந்த சமய தத்துவங்களில் மேன்மைக்குரியது சைவசித்தாந்தம்" எனக் குறிப்பிட்ட அறிஞர்
(1) மக்கே (2) கமில் சுவலமில் (3) ஆனந்த குமாரசுவாமி
(4) சேர். ஜோன் மார்ஷல் (5) ஜி. யு. போப்

31. சதருத்திரியம் அமைந்துள்ள வேதம்
(1) இருக்குவேதம் (2) யசுர்வேதம் (3) சாமவேதம்
(4) அதர்வவேதம் (5) கந்தர்வவேதம்

**32.** 'சரீரசரீரி பாவம்' என்ற கொள்கையை விளக்கியவர்
(1) இராமானுஜர் (2) மத்துவர் (3) வல்லபர்
(4) நிம்பார்க்கர் (5) ஸ்ரீசைதன்யர்

**33.** வர்ணக் கோட்பாடு பற்றி முதன்முதலாகக் குறிப்பிடும் இருக்கு வேதப் பாடலைக் கொண்டது
(1) புருஷ சூக்தம் (2) நாஸதீய சூக்தம் (3) யம சூக்தம்
(4) பிரமச்சரிய சூக்தம் (5) வருண சூக்தம்

**34.** "பற்றற்ற மனமும் உண்மையான அன்பும் இறைவனை அடையும் வழியாகும்" எனக் குறிப்பிட்ட பெரியார்
(1) சுவாமி விவேகானந்தர் (2) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
(3) காசிவாசி செந்திநாதையர் (4) ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர்
(5) அருணாசல தேசிகர்

**35.** மார்கழி மாதத்தில் விசேடமாக ஓதப்படும் புராணம்
(1) பெரியபுராணம் (2) கந்தபுராணம்
(3) திருவாதவூரடிகள் புராணம் (4) திருவிளையாடற் புராணம்
(5) பார்க்கவ புராணம்

- மேல்வரும் பகுதிகளில் தரப்பட்டுள்ள சொற்களில் **இவ்விரண்டு** சொற்கள் குறிப்பிட்ட ஒரு விடயத்தோடு தொடர்புடையவை. அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் **36** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

| | | | | |
|---|---|---|---|---|
| A<br>அபிஷேகம் | B<br>கிருஹ்ய சூத்திரம் | C<br>அலங்காரம் | D<br>சித்தன்ன வாசல் | E<br>ஆக்கத்திறன் |
| F<br>தன்வந்திரி | G<br>எல்லோரா | H<br>அழகியல் | I<br>சுஸ்ருதர் | J<br>சிரௌத சூத்திரம் |

**36.** ஆலயக் கிரியைகளோடு தொடர்புடைய சோடி
(1) A, C (2) B, H (3) C, G (4) E, J (5) F, G

**37.** வேதங்களை விளக்கத் துணைபுரியும் நூல்கள் அடங்கிய சோடி
(1) A, J (2) B, J (3) D, F (4) E, H (5) H, J

**38.** வரலாற்றுப் புகழ்பெற்ற ஓவியங்களோடு தொடர்புடைய சோடி
(1) A, I (2) B, H (3) B, G (4) D, G (5) E, H

**39.** இந்துக் கலையனுபவத்தோடு தொடர்புடைய சோடி
(1) A, J (2) B, H (3) B, I (4) D, I (5) E, H

**40.** இந்து மருத்துவத்தோடு தொடர்புடைய சோடி
(1) A, G (2) C, G (3) D, F (4) D, I (5) F, I

- **41** தொடக்கம் **45** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் **பொருந்தாததைத்** தெரிவுசெய்க.

**41. வான்மீகியின் வடமொழி இராமாயணம்**

(1) தமிழில் கம்பராமாயணம் எனச் சிறப்படைந்தது.
(2) ஏறக்குறைய இரண்டாம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்டது.
(3) இராமாயணத்தின் அடிப்படைக் கோட்பாடு விஷ்ணுவின் கிருஷ்ண அவதாரத்தோடு தொடர்புடையது.
(4) இராமாயணக் கதையின் மூலம் வட இந்தியக் கலைமரபு தமிழகத்தில் பரவலாயிற்று.
(5) இந்து தர்ம நெறிக்கும் மானுட விழுமியங்களுக்கும் அடிப்படையாக அமைந்தது.

**42. வட இந்திய இந்துப் பண்பாட்டு வளர்ச்சியில் குஷானர் காலம்**

(1) இந்துப்பண்பாடு, காந்தாரக்கலை போன்றவை முதன்மை பெற்றன.
(2) கி. மு. 200 இலிருந்து கி. மு. 165 வரை குஷானர் ஆட்சி இடம்பெற்றது.
(3) கனிஷ்கன் குஷான மன்னர்களுள் தலைசிறந்தவனாக போற்றப்படுகின்றான்.
(4) கனிஷ்கனால் வட இந்தியாவின் மேற்குப் பகுதியில் இந்துப் பண்பாடு பரப்பப்பட்டது.
(5) கட்டடக்கலை, இசைக்கலை ஆகியன இக்காலத்தில் எழுச்சிபெற்றன.

**43. அருணகிரிநாதர்**

(1) முருக வழிபாட்டின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட இவர் நீண்டகாலம் திருவண்ணாமலையில் வாழ்ந்தார்.
(2) இளமையில் கல்வி அறிவும் சமய நூல்களில் புலமைத்துவமும் பெற்று விளங்கினார்.
(3) முருகப்பெருமானால் நயன தீட்சையும் திருவடி தீட்சையும் அருளப்பெற்றார்.
(4) இவர் வாழ்ந்த காலம் பற்றி அறிவதற்கான சான்றுகள் மிக அரிதாகவேயுள்ளன.
(5) கந்தரனுபூதி, கந்தரலங்காரம், திருப்புகழ் போன்ற நூல்களைப் பாடிய பெருமைக்குரியவர்.

**44. இந்து அறிவியலில் சோதிடக்கலை**

(1) சோதிடம் என்பது நாம் செய்யும் பணிகளுக்குரிய கால விசேடங்களைக் கணித்துக் கூறுவதாகும்.
(2) வேத காலத்தில் சோதிடம் பற்றி அறிவதற்கான நம்பிக்கைகள் மிகவும் அரிதாகக் காணப்பட்டன.
(3) கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வராகமிகிரர் சோதிடத்தில் சிறந்தவராக விளங்கினார்.
(4) வேதாங்கங்களின் ஆறு அங்கங்களில் ஒன்றாக சோதிடம் அமைந்துள்ளது.
(5) ஆரியபட்டர், பிரமகுப்தர் ஆகியோரது நூல்களிலிருந்து சோதிடம் பற்றிய பல குறிப்புகள் கிடைக்கின்றன.

**45. தற்கால சமூகத்தில் இந்து அறக்கோட்பாடு**

(1) இந்துக்களின் வாழ்வியலில் அறம் சார்ந்த விழுமியங்கள் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன.
(2) இன்றைய நீதிமன்றங்களின் நடவடிக்கைகளில் இந்து சமயச் சட்டங்களும் நீதி முறைகளும் உதவி வருகின்றன.
(3) தர்மசாத்திரக் கருத்துக்கள், தேசவழமைச் சட்டம் ஆகியவற்றின் ஒன்றிணைப்பாக இந்து சட்டவியல் காணப்படுகின்றது.
(4) இந்து தர்மத்தையும் இந்து சட்டத்தையும் பாதுகாப்பதில் தண்டநீதி அவ்வளவாக உதவவில்லை.
(5) மன்னன் மக்களைப் பாதுகாக்காது விட்டால் அராஜகம் நிலவும் என அரச தர்மம் கூறுகின்றது.

- **46** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து, அவற்றுக்குப் பொருத்தமாவற்றை **I, II, III, IV** ஆகிய நிரல்களிலிருந்து தெரிவுசெய்க.

| I | II | III | IV |
|---|---|---|---|
| A<br>உதயகிரி | F<br>சிவானந்தலஹரி | K<br>மனு | P<br>சௌந்தர்யலஹரி |
| B<br>பிரம்மச்சரியம் | G<br>போதாயனர் | L<br>பஜகோவிந்தம் | Q<br>தியோகார் |
| C<br>பிருகஸ்பதி | H<br>இந்துதத்துவத்தை ஜனரஞ்சகமாகப் போதித்தமை | M<br>கள்ளாமை | R<br>அன்புவழி |
| D<br>சுப்பிரமணியபுஜங்கம் | I<br>மதுரை | N<br>மக்கள் சேவை | S<br>வாய்மை |
| E<br>சமய சமரசம் | J<br>அவாவறுத்தல் | O<br>தாராசுரம் | T<br>நாரதர் |

**46.** சங்கரர் எழுதிய நூல்களைக் குறிக்கும் தொகுதி
(1) A, G, L, P (2) B, F, M, T (3) C, F, M, T (4) E, I, O, R (5) D, F, L, P

**47.** சமணம் கூறும் மாவிரதங்களோடு தொடர்புடைய தொகுதி
(1) A, F, K, Q (2) B, J, M, S (3) C, H, K, S (4) D, I, O, R (5) E, J, N, R

**48.** சிற்பங்களோடு தொடர்புடைய இடங்களைக் குறிப்பிடும் தொகுதி
(1) A, I, O, Q (2) B, G, K, S (3) C, F, M, T (4) D, J, O, R (5) E, H, L, R

**49.** ஸ்மிருதி ஆசிரியர்களுடன் தொடர்புடைய தொகுதி
(1) A, J, O, R (2) B, F, M, T (3) C, G, K, T (4) D, I, N, R (5) E, I, O, Q

**50.** ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் மக்களுடைய வாழ்வு வளம்பெற வழங்கிய உபதேசங்களைக் கொண்ட தொகுதி
(1) A, H, K, P (2) C, F, M, T (3) D, G, N, T (4) E, H, N, R (5) B, F, M, S

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2019

නව නිර්දේශය/ புதிய பாடத்திட்டம்

| විෂය අංකය பாட இலக்கம் | 46 | විෂයය பாடம் | இந்து நாகரிகம் |
|---|---|---|---|

ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 5 | 21. | 3 | 31. | 2 | 41. | 3 |
| 02. | 1 | 12. | 2 | 22. | 2 | 32. | 1 | 42. | 2/5 |
| 03. | 1 | 13. | 1 | 23. | 3 | 33. | 1 | 43. | 4 |
| 04. | 4 | 14. | 1 | 24. | 1 | 34. | 4 | 44. | 2 |
| 05. | 5 | 15. | 3 | 25. | 2 | 35. | 3 | 45. | 4 |
| 06. | 2 | 16. | 1 | 26. | 4 | 36. | 1 | 46. | 5 |
| 07. | 3 | 17. | 5 | 27. | 3 | 37. | 2 | 47. | 2 |
| 08. | 3 | 18. | 5 | 28. | 2 | 38. | 4 | 48. | 1 |
| 09. | 4 | 19. | 4 | 29. | 1 | 39. | 5 | 49. | 3 |
| 10. | 2 | 20. | 5 | 30. | 5 | 40. | 5 | 50. | 4 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 1 × 50 = 50

# இந்து நாகரிகம்

## வினாத்தாள் II

## வினாத்தாளின் குறிக்கோள் பற்றிய அறிமுகம்

1. பாடசாலைகளில் பயனுறுதிமிக்க கற்றல் – கற்பித்தல் பற்றிய செயற்பாட்டின் பயன்பாட்டை இவ்வினாத்தாள் மூலம் மதிப்பீடு செய்தல்.

2. இந்து நாகரிகம் தொடர்பான பாடத்திட்டத்தில் உள்ள விடயங்களிலே மாணவர்களின் அடைவு மட்டத்தினைப் பரீட்சித்தல்.

3. இந்துப்பண்பாட்டு விழுமியங்களை நடைமுறை வாழ்வில் கைக்கொள்ளக் கூடியவர்களாகத் தமது அறிவுத் திறனைப் பெற்றுள்ளனரா? என்பதைப் பரீட்சித்தல்.

4. இந்து நாகரிகம் தொடர்பான விடயங்களைக் கற்று தத்தமது ஆளுமைகளை விருத்தி செய்யக்கூடிய தகுதியுள்ளனரா? என்பதைப் பரீட்சித்தல்.

5. இப்பாடத்தில் அடங்கியுள்ள விடயங்களைச் சமூக விருத்திக்கும் சமூக நல்லிணக்கத்திற்கும் எவ்வெவ் வகைகளில் பயன்படுத்தக்கூடிய அறிவுத் திறன் பெற்றுள்ளனர் என்பதைப் பரீட்சித்தல்.

6. மாணவர்கள் தேசிய மட்டத்திற்குரிய தகுதியைப் பெற்றுனள்ளனரா? என்பதைப் பரீட்சித்தலும் இதன் நோக்கமாகும்.

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

පැරණි නිර්දේශය/ பழைய பாடத்திட்டம்/ Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

හින්දු ශිෂ්ටාචාරය II
இந்து நாகரிகம் II
Hindu Civilization II

46 T II

06.08.2019 / 0830 – 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

- **பகுதி I** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் **பகுதி II** இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் **20** புள்ளிகள் உரித்தாகும்.

## பகுதி I

**1.** இருக்கு வேதம் போற்றும் சமயநெறியில் மேல்வரும் தெய்வங்கள் பெறும் முக்கியத்துவத்தை விவரிக்குக.

(அ) இந்திரன்

(ஆ) வருணன்

(இ) அக்கினி

**2.** சிந்துவெளி நாகரிக காலத்தில் நிலவிய சமயம் இந்து சமயச் சார்புடையது என்பதனை மேல்வரும் காரணிகளின் அடிப்படையில் ஆராய்க.

(அ) சிந்துவெளி நாகரிக காலம்

(ஆ) மக்களின் சமய நம்பிக்கைகள்

(இ) கலைகள்

**3.** பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவசமயத்தை வளம் பெறச்செய்வதில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆற்றிய பணிகளை மேல்வரும் தலைப்புகளில் பரிசீலிக்குக.

(அ) சமயப்பணி

(ஆ) நூற்பணி

(இ) சமூகப்பணி

## பகுதி II

**4.** இந்துப் பண்பாட்டில் குப்தர்காலம் பெறும் முக்கியத்துவத்தை மேல்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.

(அ) சமயநிலை

(ஆ) கலை வளர்ச்சி

(இ) இலக்கிய வளர்ச்சி

**5.** இந்துக்களது வாழ்வியலை மேம்படுத்துவதில் திருக்குறள் எடுத்துக்காட்டும் வழிமுறைகளை மேல்வரும் தலைப்புகளில் பரிசீலிக்குக.

(அ) தனிமனித ஒழுக்க விழுமியங்கள்

(ஆ) இல்லறவியல்

(இ) கல்வி

**6.** இந்து சமய நெறிகளுள் வைணவ சமயநெறியின் சிறப்பம்சங்களை மேல்வரும் காரணிகளை கருத்திற்கொண்டு விவரிக்குக.

(அ) காலந்தோறும் வைணவம்

(ஆ) வழிபாட்டு முறைகள்

(இ) அவதாரச்சிறப்பு

**7.** வேதாந்த தத்துவ வளர்ச்சியில் மத்துவரின் துவைத வேதாந்தத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை விளக்குக.

**8.** மேல்வருவனவற்றுள் எவையேனும் **நான்கிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(அ) மகாபாரதம்

(ஆ) நடராஜர் வடிவம்

(இ) தாயுமானசுவாமிகள்

(ஈ) உபநிடதங்களில் அறம்

(உ) நல்லூர் கந்தசுவாமி கோயில்

(ஊ) மேற்குலக நாடுகளில் இந்துப்பண்பாடு

❊ ❊ ❊

# 46 இந்து நாகரிகம் II
## பகுதி I

**01. இருக்கு வேதம் போற்றும் சமயநெறியில் மேல்வரும் தெய்வங்கள் பெறும் சிறப்பினை விபரிக்குக.**

**(அ) இந்திரன்**
**(ஆ) வருணன்**
**(இ) அக்கினி**

**(அ) இந்திரன்**

இருக்குவேதம் கூறும் வழிபாடு இயற்கை வழிபாடு ஆகும். இயற்கை சக்திகளை தெய்வீக நிலைப்படுத்தி மக்கள் வழிபாடியற்றினர்.
இருக்குவேதத் தெய்வங்கள் விண்ணைச் சார்ந்த தெய்வங்கள் ஒருவகையாகவும் மண்ணைச் சார்ந்தவை ஒருவகையாகவும் இடைவெளியைச் சார்ந்தவை மற்றொரு வகையாகவும் வகுக்கப்பட்டுள்ளன
இந்திரன் ஆகாயத்திற்கும் பூமிக்கும் இடைப்பட்ட தெய்வங்களின் ஒன்றாகவும்போற்றப்பட்டான்.
இருக்குவேதத்தில் பாடல்களால் போற்றப்படுபவன்
மிக விரிந்த தெய்வீக வரலாற்றுப் பெருமையுடையவன்.
இவன் கை, கால் முதலிய உறுப்புக்களுடன் உருவகப்படுத்தப்படுகின்றான்.
இடிமுழக்கம் இரண்டுடன் தொடர்புடையவன்.
வறட்சி, இருள் என்னும் அரக்கர்கள் இவனது பகைவர்.
இவன் ஒளியைப் பரவச் செய்பவன். தடுப்புள்ள நீரை விடுவித்து பெரும் புகழ் ஈட்டியவன்.
கையில் வச்சிராயுதம் கொண்டு விளங்குபவன். அதுவே அவனது படைக்கலம்.
இவன் விருத்திரனை போரில் அழித்தவன், எனவே விருத்திரஹா என்பது இவரது சிறப்புப் பெயர்.
வீரர்கள் இவனை வழிபடுவர். இவர்களுக்கு வேண்டும் செல்வம் வெற்றி தருபவன்.
வழிபடுவோனை பாதுகாப்பது இவனது பண்பு. இந்திரன் பல தெய்வங்களோடு இணைத்துப் போற்றப்படுகின்றான். அலைந்து திரிந்து மலைகளை நிலைநிறுத்திய பெருமையுடையவன். இந்திரன் மிக பழைமை வாய்ந்த தெய்வம்.

**(07 புள்ளிகள்)**

**(ஆ) வருணன்**

இருக்குவேதம் குறிப்பிடும் தெய்வங்களுட் தலைசிறந்த தெய்வமென விளங்குபவன் வருணன்.
12 பாடல்களில் இவன் போற்றப்படுகின்றான்.
இவனது உருவத் தோற்றம் கை, கால், முகம், கண்கள் முதலிய உடலுறுப்புடன் கூறப்படுகின்றது.
சூரியனை இருகண்களில் ஒன்றாகக் கொண்டு விளங்குபவன். இவனை சூழ்ந்து சாரணர் இருப்பர்.
இவன் அரசன் மட்டுமல்ல , மன்னர் மன்னனாகத் திகழும் சக்கரவர்த்தி.
அவன் கோலோச்சும் முறைபற்றி இருக்குவேதம் கூறும் இவனது மாயாசக்தி பற்றியும் கூறுகின்றது.
ஒழுங்கைக் கடைப்பிடிப்பதில் ஈடிணையற்றவன்.
இவன் கடைப்பிடிக்கும் ஒழுங்கு ரிதம், நியதி, விரதம், என்றெல்லாம் கூறப்படும்.
இவனது ஆணையாலேயே இயற்கை ,நியதியின் வழிப்பட்டு இயங்குகின்றது.
விண்ணையும் மண்ணையும் உரிய இடத்தில் நிறுத்தியவன்

வானில் ஒளி, நீரில் நெருப்பு, மலையில் சோமக் கொடி ஆகியவற்றைக் தோற்றுவித்தவன்
இவனது கட்டளையில் ஆறுகள் ஒடுகின்றன.
சந்திரன் தாரகைகள் இவனது ஆணைக்குட்பட்டவை.
இவன் யாவும் அறிந்தவன், நேர்மையானவன், பாவஞ்செய்பவர்களைத் தண்டிப்பான்.
பாவத்திற்குப் பச்சாத்தாபப்படுபவரை மன்னிப்பான். அறிவின்மையால் முன்னோர் செய்த பாவத்தையும் பொறுத்து மன்னிப்பவன். பாவஞ்செய்தவர்கள் தம் குறை பொறுக்கும் படி வேண்டும் பாடல்கள் வருணசூக்தங்களாக உள்ளன.

(07 புள்ளிகள்)

**(இ) அக்கினி**

அக்கினி இருக்குவேதத்தில் இந்திரனுக்கு அடுத்துப் பெருமை பெறுபவன். இவனுக்கு 200க்கு அதிகமான பாடல்கள் உண்டு.
யாகத்தில் கற்பிக்கப்படும் கற்பனை வழியே அவனது உருவத்தோற்றம் கூறப்படும்.
இவனது நாக்கின் மூலம் தேவர்கள் தமது அவியைப் பெறுவர்.
இவன் சுவாலித்து எரியும் போது எல்லாப்பக்கங்களிலும் முகங்களைக் கொண்டு காணப்படுபவன்.
இவன் தெய்வப்பறவையாகப் போற்றப்படுபவன்.
இவனது உணவு நெய்யாகும்.
இவன் மூலம் தேவர்கள் யாகங்களில் தம் பங்கைப் பெறுவர்.
இவனது ஒளி சூரியனது கிரணங்களை நிகர்க்கும்
இவனே முதன் முதலில் வேட்டவன் என இருக்கு வேதம் கூறும்.
மக்களுடன் நெருங்கிய தொடர்புபட்டவன்.
வீட்டிற்குத் தலைவன்.
யாகங்களில் அளிக்கப்படும் அவிகளைத் தேவர்களிடம் கொண்டு சேர்ப்பிக்கும் தேவதூதன்.
யாகத்தோடு தொடர்புடையவன் என்பதால் ஹோதா என்ற சிறப்புப் பெயர் இவனுக்குரியது யாகம் வேட்பவன் என்று பொருள்.
அக்கினி வேட்டலில் மிக்க பயிற்சி பெற்ற புரோகிதன்.
வழிபடுவோருக்கு பல நன்மைகளையும் புத்திரப்பேற்றையும் செல்வத்தையும் அளிப்பவன்.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 07 +07+06=20புள்ளிகள்)

**02. சிந்து வெளி நாகரிக காலத்தில் நிலவிய சமயம் இந்து சமயம் சார்புடையது எனக் கருதப்படுமாற்றினை மேல் வரும் தலைப்புக்களின் அடிப்படையில் ஆராய்க.**

**(அ) சிந்துவெளிநாகரிக காலம்**
**(ஆ) மக்களின் சமய நம்பிக்கைகள்**
**(இ) கலைகள்**

**(அ) சிந்துவெளி நாகரிக காலம்.**

உலகில் பலபாகங்களிலும் தோன்றிய நதிக்கரை நாகரிகங்களுக்கு ஒப்பான சிறப்புடையதாக சிந்துவெளி நாகரிகமும் அமைகின்றது.
சிந்துவெளி நாகரிகம். கி.மு 3250 தொடக்கம் கி.மு 2750 வரையான காலப்பகுதியில் சிறப்புடன் விளங்கியிருக்கலாம் என்பது ஆய்வாளரின் கணிப்பாகும்.
சிந்துவெளிப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் இந்து சமய நம்பிக்கைகளைக் கடைப்பிடித்தனர் என்பது அங்கு கிடைத்துள்ள வரலாற்று ஆதாரங்களைக் கொண்டு ஊகிக்கின்றனர்.
ஆய்வாளர்களுக்கு இந்நாகரிகம் நிலவிய மொகஞ்சதாரோ , ஹரப்பா போன்ற நகரங்களில் கிடைத்த அழிபாடுகள் குறிப்பிடற்பாலன.
இந்நாகரிகப்பகுதியானது 1922முதல் 1930வரையான காலத்தில் சேர் ஜோன்மார்ஷல் தலைமையிலான புதைபொருளாய்வாளர்களால் அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

**(06 புள்ளிகள்)**

**(ஆ) மக்களின் சமய நம்பிக்கைகள்**

சிந்து வெளிப்பிரதேச புதைபொருட்கள் இந்து சமயச் சார்புடையனவாக உள்ளன.
இப் புதைப்பொருட்சின்னங்கள் வாயிலாக இம்மக்கள் இந்துத் தெய்வங்களை வழிபட்டனர் என்பர்.
சைவத்தின் பரம்பொருளாகிய சிவனை மக்கள் சிறப்பாக வழிபட்டனர் எனக் கருதுவர்.
முத்திரைகள் ,இலிங்க வடிவங்கள் என்பன இதற்குச் சான்றாகக் கொள்வர்.
முத்திரை ஒன்றில் யோக நிலை வடிவம் உள்ளது.
இவ்வடிவத்தின் கீழ் விலங்கினங்கள் காணப்படுவதால் சிவனுடன் இனங்காண்கின்றனர்.
சக்தி வழிபாடு , தரைப் பெண்வழிபாடு.
பூமியைத் தாயாக வழிபட்டமைக்குரிய முத்திரை கிடைத்துள்ளது.
பாம்பை வழிபடும் வழக்கம் இருந்துள்ளமைக்கு களிமண் தாயத்தைச் சான்றாகக் கொள்வர்.
விருட்சவழிபாடு
சூரியவழிபாட்டோடு தொடர்புடைய ஆதாரங்கள்.
சமயச்சடங்குகள் இடம் பெற்றுள்ளன.
நிலையான கோயில்களை சிந்து வெளி மக்கள் அமைத்திருக்கலாம் எனவும் அறிஞர் கருதுவர்
பலியிடுதல் சடங்கு இடம்பெற்றமைக்கு உரிய முத்திரை ஆதாரம் கிடைத்துள்ளது.
நிவேதன வழிபாடு இடம்பெற்றிருக்கலாம் எனவும் கருதுவர். இதற்கு ஆதாரமாகப் பூசைத்தட்டுக்கள் கிடைத்துள்ளன.

**(07 புள்ளிகள்)**

**(இ) கலைகள்**

சிந்து வெளிப்பிரதேசத்தில் கலைகளின் வளர்ச்சிபற்றியும் அறிஞர் கூறியுள்ளனர்.
சிந்து நாகரிகத்தில் கட்டடக்கலை சிறப்புற்று விளங்கியது.
திமில் பருத்த எருது, குரங்கு சிவயோகி என ஊகிக்கப்படும் வடிவம், தரைப்பெண் வடிவங்கள் அக்கால மக்களின் சிற்பத்திறனைக் காட்டும் சான்றுகளாகக் கொள்ளலாம்.
சிற்பக்கலை வளர்ச்சியின் ஆரம்பநிலை சமயச் சார்புடையதென அறிஞர் கருதுவர்.
ஏராளமான மட்பாத்திரங்களில் பல உருவங்கள் ஒவியமாகத் தீட்டப்பட்டுள்ளன. இத்தகைய குறியீடுகள் அக்கால மக்களின் கலைத்திறனை உணர்த்துவதாகக் கொள்வர் .
இசைக்கலை, நடனக்கலை தொடர்பாகவும் சிலவடிவங்கள் கிடைத்துள்ளன. மிருதங்கம் போன்ற தோற்கருவியின் முத்திரை.
நடனக் கோலத்து வெண்கலச்சிற்பங்கள் குறிப்பிடற்பாலன.

**(07 புள்ளிகள்)**
**(மொத்தம் 06 +07+07=20புள்ளிகள்)**

**03. பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவசமயத்தை வளம் பெறச் செய்வதில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆற்றிய பணிகளை மேல்வரும் தலைப்புக்களில் பரிசீலிக்குக.**
**(அ) சமயப்பணி**
**(ஆ) நூற்பணி**
**(இ) சமூகப்பணி**

**(அ) சமயப்பணி**

ஈழத்தில் உதித்த சைவப் பெரியார்களின் வரிசையில் நாவலர் பெருமான் குறிப்பிடத்தக் கவர். 19ம் நூற்றாண்டில் கிறிஸ்தவ மிஷனரிமாரின் செல்வாக்கு பரவிய காலத்தில் ஆறுமுக நாவலர் நல்லூரில் 1822 டிசம்பர் 18ம் ஆம் திகதி பிறந்தார். தமிழ், ஆங்கிலம் ,சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் புலமை மிக்க-வர். சைவசமயத்தையும் அதன் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்ற இலட்சியத்தில் செயற்பட்ட பெரியாராவர் .

சைவப்பிரசங்கங்களை ஆற்றி மக்களிடையே சமய விழிப்புணர்வு ஏற்படுத்தியவர் - வண்ணை வைத்தீசு-வரன் கோயிலில் பிரசங்கங்கள் நிகழ்த்தியமை , நல்லூர் கந்தசுவாமி கோவில் ஆலயங்களைப் புனருத்-தாரணம் செய்தமை.
திருகேதீச்சரம், திருக்கோணேசுவரம்

'மன்னாருக்கு சமீபத்திலுள்ள மாதோட்டம் என்னும் நன்னகரில் தேன்பொந்தொன்று உள்ளது. அதனைச் சென்றடையுங்கள்' என விஞ்ஞாபனம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

சைவசமய நூல்கள் பலவற்றை எழுதி வெளியிட்டு மக்களிடையே சமயநூல் உணர்ச்சியை ஏற்படுத்தியவர்.
சைவ வினாவிடை -1ம் புத்தகம் -2ஆம் புத்தகம்.

பண்ணிசையினை வளர்த்தமை- பஞ்சபுராணம் ஓதுதல்

பிற சமய கண்டனம், அகச்சமய கண்டனம் ,கண்டனப் பிரசுரம் மூலம் சைவத்தின் மாண்பை நிலைநிறுத்தியமை.

சைவதூஷண பரிகாரம் , நல்லூர் கந்தசுவாமி கோவில், யாழ்ப்பாணத்துச் சமயநிலை குறிப்பிடற்பாலன.

தமிழகத்தில் அவர் மேற்கொண்ட பணிகளைப் பாராட்டிய வகையில் "நாவலர்"என்ற சிறப்புப் பட்டத்தைப் பெற்றவர்.

**(07 புள்ளிகள் )**

**(ஆ) நூற்பணி**

வண்ணார்பண்ணையிலும் தமிழ் நாட்டிலும் சிதம்பரத்திலும் வித்தியாநுபாலன யந்திர சாலைகளை நிறுவினார்.

அகராதி பதிப்பித்தல் – சூளாமணிநிகண்டு

இலக்கிய நூல்கள் – இலக்கண விளக்கச் சூறாவளி , மகாபாரதம்

தருக்க நூல்கள் – தருக்க சங்கிரகம்

அறிவியல் சார் நூல்கள் – இலங்கை பூமிசாத்திரம்

முதன் முதல் ஏட்டுச்சுவடிகளிலிருந்து நூல்களை அச்சுவாகன மேற்றினார்– தொல்காப்பியசூத்திரவிருத்தி.

தொகுத்துப் பதிப்பித்தமை –அருட்பா.

உரை எழுதிப் பதிப்பித்தமை – ஔவையாரின் நல்வழி, ஆத்திசூடி, கொன்றை வேந்தன்

செய்யுள் நூல்களை வசன நடையில் எழுதி பதிப்பித்தமை –திருவிளையாடற் புராண வசனம், பெரியபுராண வசனம், கந்தபுராண வசனம்

இலக்கணச் சுருக்கம்

நாவலர் பதிப்பே நல்லபதிப்பு– என்று அன்றும் இன்றும் பாராட்டப்படுகின்றது.

**(06 புள்ளிகள் )**

**(இ) சமூகப்பணி**

1876/77 ஆண்டுகளில் கடும்வரட்சி ஏற்பட்ட பஞ்ச வேளையில் கஞ்சித் தொட்டி தர்மம் மேற்கொண்டமை.

யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் பேதிநோய் பரவிய போது மக்களோடு இணைந்து உரிய பரிகாரங்களை மேற்கொண்டமை.

சமூகத்தைப் பாதிக்கும் மதுபாவனை , சூது முதலிவற்றை ஒழிக்கப்பாடுபட்டமை.

யாழ்ப்பாணக்கச்சேரி நிர்வாகத்தின் ஊழல் தொடர்பாக 1878 ஆம் ஆண்டு தேசாதிபதிக்கு விண்ணப்பம் எழுதி வழங்கியமை.

பிறரை உரிய வேளையில் கௌரவித்தமை.

சுதேச எழுச்சிக்காக பாடுபட்ட தேசிய வீரர்.

சைவத் தமிழ் மரபில் புலமைமிக்க மாணவர் பரம்பரையை உருவாக்கி இலங்கையின் சைவ மறுமலர்ச்சிக்கு காரணமாக விளங்கினர் .

**(07புள்ளிகள் )**

**(மொத்தம் 07 +06+07=20புள்ளிகள் )**

## பகுதி II

**4. இந்துப்பண்பாட்டில் குப்தர் காலம் பெற்ற சிறப்பினை மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க.**

**(அ) சமயநிலை**

**(ஆ) கலைவளர்ச்சி**

**(இ) இலக்கிய வளர்ச்சி**

**(அ) சமய நிலை**

இந்து நாகரிகத்தின் உன்னத காலம்.
பெரும்பாலான மன்னர்கள் சைவ வைணவ சமயச் சார்புடையவர்களாக இருந்தமை.
வைணவ சார்பானவர்கள் பரமபாகவதர் என்றும் பரமபட்டாரகர் என்றும் அழைக்கப்பட்டனர்.
சைவம் வைணவம் முதலான சமய நெறிகள் பற்றிய கருவூலங்களான புராணங்கள் எழுச்சி பெற்ற காலம்.
சைவம் சார்பான மன்னர்கள் பரம மகேஸ்வரர் என்று அழைக்கப்பட்டனர்.
அறுவகைச் சமயநெறிகளில் பிரதானமானவை எழுச்சி பெற்ற காலமாக இக்காலம் அமைந்தது. சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம் முதலிய சமய நெறிகளின் வளர்ச்சி வைதிக சமய நெறியும் பொது வழக்கு நெறியும் கலந்தன.
சமய வழிபாட்டிற்கான சிவன் , விஷ்ணு, அம்மன் , சூரியதேவன் ஆகிய கடவுளர்க்கான கோயில்கள் செல்வாக்குப் பெற்றன. முருக வழிபாட்டின் சிறப்பு.
இக்காலத்தில் மகாபாரதம் இறுதி வடிவம் பெற்றது.
புராண இதிகாச கதைகள் தழுவிய இலக்கியங்கள் எழுச்சி .
சிற்பக்கலை வளர்ச்சி, இறைவழிபாடு, பக்தி மரபு, திருக்கோயில் பண்பாடு விழாக்கள் சிறப்படைந்தன.
திக்குப்பாலகர் வழிபாடு, தீர்த்தம், விரதம் சிறப்படைந்தன.
அரசர்கள் ஆலயங்களுக்குத் தானங்கள் வழங்கினர்
சமய வாழ்க்கை வளம்பெற அனுசரணையாக தர்மசாத்திரங்கள் செல்வாக்கடைந்தன குருகுலக்கல்வி.
பௌத்தசமயமும் சிறப்படைந்தது.
அரச சாசனங்களில் “நாராயண ஸ்துதி” என்னும் திருமால் புகழ் மாலை காணப்படுகின்றது.

**(07 புள்ளிகள்)**

**(ஆ) கலை வளர்ச்சி**

இக்காலப்பகுதியல் கோயிற் கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, நாட்டியக்கலை போன்றவை வளர்ச்சியடைந்தன.
இந்து கட்டடச் சிற்பக்கலை வளர்ச்சியின் ஆரம்பகாலம்.
வட இந்தியாவில் உத்திரப்பிரதேசம், பீகார், மத்தியபிரதேசம் ஆகிய இடங்களில் குப்தர்காலக் கோயில்கள் எழுந்தன.
சிவன், விஷ்ணு, சக்தி ஆகிய தெய்வங்களுக்கு கோயில்கள் அமைக்கப்பட்டன.
நாகரக் கட்டடக் கலைப்பாணிகள் மூலமான கோயில்கள் குறிப்பிடற்பாலன.
கோயில்கள் குடைத்தளியாகவும் கருங்கல் செங்கல் கொண்டு கட்டப்பட்ட கட்டுத்தளிகளாகவும் விளங்கின.

கட்டடக் கலையில் பல்வேறு பரிமாணங்கள்.
சிகரக் கோயில், தியோகா தசாவதாரக் கோயில் , பட்டாரிமகாதேவக் கோயில், பித்தரக்கோன் கோயில் குறிப்பிடத்தக்கன. பித்தரக்கோன் கோயில் கூரை பிரமிட் வடிவம். இது குப்தர் கால பொறியியல் நுட்பத்தை விளக்கி நிற்கிறது.
குப்தர்காலக் கலைகளில் தலைசிறந்தது சிற்பக்கலையாகும். இக்காலத்தில் கல்லில் செதுக்கப்பட்ட சிற்பங்கள் சிறப்பு வாய்ந்தவை. அஜந்தாவில் காணப்படுகின்றது.
குப்தர்காலத்தில் சிவலிங்கம் முகத்துடன் கூடியவராக விளங்குகின்றார்.
திருமால் அவதாரச் சிற்பங்களும் முதன் முதலாகச் செதுக்கப்பட்ட காலமும் இதுவாகும். வட மதுரா திருமால் சிற்பம் சிறப்பு வாய்ந்தது.
பித்தரக்கோன் கோயில் சுடுமண் சிற்பங்கள் புராணகதைகளைச் சித்தரிக்கின்றன. இராமாயணச் சிற்பங்கள் திருமாலின் அனந்த சயனம், மகாயோகி வடிவில் சிவன், கஜேந்திர மோட்சம் ஆகியவை சிறப்புடையன.
அஜந்தாக் குகையில் குப்தர் கால ஓவியங்கள் உள்ளன.
குப்தர் காலத்தில் வெளியிடப்பட்ட பொற்காசுகளும் கலைச் சிறப்புடையவை .
நடனம், இசை முதலிய கலைகளும் வளர்ச்சி கண்டன.
இத்தகைய சிற்பக்கலையினால் குப்தர்காலத்தில் இந்து நாகரிகம் வளம் பெற்று விளங்கியமைக்குச் சான்றாகும்.

**(07 புள்ளிகள் )**

**(இ) இலக்கிய வளர்ச்சி**

இக்காலத்தில் மகாபாரதம் இறுதி வடிவம் பெற்றது.
சைவ வைணவ சமய நெறிகள் சார்ந்த புராணங்கள் எழுச்சி .
காளிதாசன் , பாரவி, பாணர், தண்டி முதலிய வடமொழிப் புலவர்கள் குப்தர் காலத்தில் செல்வாக்குப் பெற்றனர்.
சாகுந்தலம், குமாரசம்பவம், இரகுவம்சம் , விக்கிரமோர்வசியம் போன்ற இலக்கியங்கள் தோன்றின. இவை இந்துப்பண்பாட்டின் சிறப்புக்குச் சான்று .
சோதிட இலக்கியங்கள் , ஆரிய பட்டரின் ஆரிய பட்டீயம், பஞ்ச சித்தாந்தம் வராகமிகிரரின் பிருகத் சம்ஹிதை மற்றும் மருத்துவ நூல்களும் குறிப்பிடற்பாலன.
உபநிஷங்களைத் தொடர்ந்து தத்துவ தரிசன உரைகளும் குப்தர் கால இலக்கிய வளர்ச்சியைக் காட்டி நிற்கின்றன.

**(06 புள்ளிகள்)**
**(மொத்தம் 07 +07+06=20புள்ளிகள்)**

**05. இந்துக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதில் திருக்குறள் காட்டி நிற்கும் வழி முறைகளை மேல்வரும் தலைப்புக்களில் பரிசீலிக்குக.**

**(அ) தனிமனித ஒழுக்க விழுமியங்கள்**

**(ஆ) இல்லறவியல்**

**(இ) கல்வி**

**(அ) தனிமனித ஒழுக்க விழுமியங்கள்**

திருக்குறள் உலகப் புகழ் பெற்ற தமிழ் இலக்கியம். இது அடிப்படையில் ஒரு வாழ்வியல் நூல்.
மாந்தர் தம் அகவாழ்வில் கூடி வாழவும் புற வாழ்வில் இன்பமுடனும், நலமுடனும் வாழவும் தேவையான அடிப்படைப் பண்புகளையும் அறக்கருத்துக்களையும் விளக்குகின்றது.
தனிமனிதன் , குடும்பம் , சமூகம் உலகம் சார்ந்த நிலையில் ஒழுக்கத்துடனும் அறத்துடனும் வாழ பல நல்ல சிந்தனைகளை திருக்குறள் கூறுகின்றது.
மனத்துக்கண் மாசிலன் ஆதல் தனிமனித வாழ்வுக்கு மிகவும் முக்கியத்துவமுடைய அறவுரை. மனத்தில் ஒருவன் குற்றமில்லாதவனாய் இருப்பதே ஒழுக்கம் , அறம் ஆகின்றது.
பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகிய இந்நான்கு குற்றங்களைக் களைந்து வாழ்வதே அறம்.
நற் செயல்களில் ஈடுபடுவதை வள்ளுவர் உயர்ந்த அறமாகப் போற்றுகின்றார்.

அன்புடைமை, அருளுடைமை, அடக்கமுடைமை, அழுக்காறாமை, இனியவை கூறல் இன்னா செய்யாமை , ஈகை , ஒழுக்கமுடைமை, சிற்றினஞ் சேராமை, சான்றாண்மை, கூடா ஒழுக்கம், செய் நன்றி அறிதல், நட்பு , பெரியாரைத் துணைக் கோடல் , விருந்தோம்பல், வாய்மை, குற்றங்கடிதல் போன்ற அதிகாரங்களில் வள்ளுவர் தனிமனித ஒழுக்க விழுமியங்கள் சார்ந்த கருத்துக்களாகப் போற்றியுள்ளார். நல்லொழுக்கம் ஒன்றே அறமாகிய நன்மைக்கு வித்தாக அமையும்.

இவற்றிலிருந்து குறள்களைக் குறிப்பிட்டு விடையளிக்கலாம்.

**(07 புள்ளிகள் )**

**(ஆ) இல்லறவியல்**

இந்து சமூக அமைப்பில் இல்லறவியல் சிறப்புப் பெறுகின்றது.
வள்ளுவர் தமது குறளில் இல்லறத்தானது ஒழுக்க நெறி எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை இல்லறவியல் என்ற பகுதியில் எடுத்துக் காட்டியுள்ளார்.
இல்லறத்தை நல்லறமாகப் போற்றுகின்றார்
இல்லறவாழ்வில் ஒருவன் இல்லாளோடு இணைந்து செய்ய வேண்டிய கடமைகள் பல. பிறருக்கு நன்மை செய்யவும் தாம் பெற்ற குழந்தைகளுக்குரிய கடமைகளை நிறைவேற்றவும் இல்லற தர்மம் சிறந்த வாய்பாகும். நால்வகை ஆச்சிரமங்களில் இல்லற தர்மம் முக்கியத்துவம் பெறுகின்றது.
அறம் , பொருள், இன்பம், வீடு, நான்கையும் எய்துவதற்கு இல்லற தர்மம் முக்கியமானது.

“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது”

என இல்லறவியல் சிறப்புப் பற்றிக் கூறுகின்றார்.

“தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல்தலை”

பிதிரர் ,தெய்வம், விருந்து, சுற்றத்தவர்களை இல்லறத்தில் ஓம்பல் தலை என வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

இல்வாழ்வான் பெறும் உயர்ந்த பேறுபற்றி வள்ளுவர்

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்”

என்று சிறப்பிக்கின்றார்.

**(07 புள்ளிகள்)**

**(இ) கல்வி**

கல்வி ஒருவனது வாழ்வு வளம் பெற பெரிதும் இன்றியமையாதது. வள்ளுவன் கல்வி பற்றியும் கல்லாமையினால் வரும் துன்பம் பற்றியும் சிறப்பாகக் கூறியுள்ளார். 40வது அதிகாரத்தில் கல்வியின் சிறப்பு கூறப்படுகின்றது . கற்கவேண்டியவற்றைக் கற்று அதன்வழி ஒழுகுதல் ஒருவனது வாழ்வு செம்மையடைய பெரிதும் தேவையாகும்.

“கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக”

என்ற குறள் மூலம் கல்வி சார்ந்த ஒழுக்கம் கூறபப்பட்டுள்ளது.

“உடையவர் முன் இல்லார் போல கற்பரே கற்றவராவர்
கல்வியானது கேடில்லாத சீரிய செல்வம். அழிவில்லாதது.

கல்வி கற்றவரே கண்களையுடையவர். மாந்தர் கற்றால் மணற்கேணியை தொட்டவுடன் நீர் ஊறுவது போன்று அறிவு கற்றவர்களுக்கு எந்நேரமும் ஊறும் என வள்ளுவர் கூறுகின்றார். ஒரு பிறப்பில் கற்றகல்வி ஒருவனுக்கு ஏழுபிறப்பிலும் சென்று உதவவல்லது என்பது வள்ளுவர் வாக்கு.

“ஒருமைக் கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து”

என வள்ளுவர் கல்வியின் பெருமையைக் கூறுகின்றார். கற்றதனால் ஒருவனுக்கு கிட்டும் பயன் ஞான வடிவினனாகிய இறைவனை வழிபடுதலாகும் என்ற உயர்ந்த பயனைக் குறிப்பிடுவது கல்வியின் சிறப்பிற்குச் சான்று

**(06 புள்ளிகள்)**

**(மொத்தம் 07 +07+06=20புள்ளிகள்)**

**06. இந்துசமய நெறிகளுள் வைணவ சமய நெறியின் சிறப்பம்சங்களை மேல்வரும் தலைப்புகளில் விபரிக்குக.**

**(அ) காலந்தோறும் வைணவம்**
**(ஆ) வழிபாட்டு முறைகள்**
**(இ) அவதாரச்சிறப்பு**

**(அ) காலந்தோறும் வைணவம்**

இருக்குவேதத்தில் விண்ணைச் சார்ந்த தெய்வமாக விஷ்ணு சிறப்புப் பெறுகின்றார். உபநிடதங்களில் மகா நாராயண உபநிடதம் குறிப்பிடத்தக்கது. இதிகாசத்தில் மகாபாரதத்தில் இடம்பெறும் பகவத் கீதை வைணவ சமய நெறிக்கு முக்கியமான நூலாகும். புராணங்களில் நாரதீய , கருட, பாகவத, விஷ்ணு புராணங்களில் விஷ்ணுவின் பரத்துவம் பேசப்படுகின்றது.
பரம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம் அர்ச்சா விஷ்ணு மகத்துவத்தை கூறுகின்றன.
விஷ்ணு என்ற சொல்லுக்குப் பொருள் எங்கும் நிறைந்தவர் என்பதாகும்.
விஷ்ணுக்குரிய ஆகமங்களாக பாஞ்சராத்திரம் வைகானசம் குறிப்பிடற்பாலன.
சங்க இலக்கியங்களில் விஷ்ணுவின் சிறப்பும் வழிபாடும் கூறப்படுகின்றது. “மாயோன் மேய காடுறை உலகும்” எனத் தொல்காப்பியத்தில் விஷ்ணு வழிபாடு கூறப்படுகின்றது.
பல்லவர் காலம் தமிழகத்தில் பக்தி நெறிக்காலம். முதல் ஆழ்வார்களும் ஏனைய ஆழ்வார்களும் மங்களாசனம் பெற்ற தலங்களைப் போற்றி விஷ்ணுவின் தெய்விகப் பெருமைகளைத் தமது பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர். வைணவ பக்தி சிறப்படைந்தது.
சோழர் காலத்திலும் வைணவ நெறி சிறப்புற்றது.
தமிழகத்தில் ஸ்ரீரங்கம் , காஞ்புர வரதராஜப் பெருமாள் குறிப்பிடத்தக்கன. திருப்பதி வெங்கடாசலபதி திருத்தலம் வைணவ நெறியின் மேன்மையைக் காட்டிநிற்கிறது.
குப்தர் காலத்தில் வைணவ சமய நெறி அதிக செல்வாக்கைப் பெற்றிருந்தது சாளுக்கிய அரசர் காலத்திலும் வைணவம் சார்ந்த சமய மரபுகள் காணப்பட்டன
வட இந்திய பக்தி நெறியாளர்களில் துளசிதாசர், சைதன்யர், கபீர்தாசர்,
மீராபாய் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.
விஜயநகர நாயக்கர் காலத்தில் வைணவ சமய நெறியில் வடகலை, தென்கலை என
இருபிரிவுகளில் வளர்ச்சி ஏற்பட்டது . ஈழத்திலும் புகழ்பெற்ற வைணவ ஆலயங்கள் உள்ளன .

**(07 புள்ளிகள்)**

**(ஆ) வழிபாட்டு முறைகள்**

விஷ்ணுவுக்குரிய வழிபாட்டு மரபில் ஸ்ரீராமநவமி சிறப்பாகும். இக்கொண்டாட்டம் பத்து தினங்கள் நடைபெறும். பங்குனி மாதத்தில் புனர்பூச நட்சத்திரமும், நவமி திதியும் கூடிய நாளில் இக் கொண்டாட்டம் இடம்பெறும். இத்தினம் இராமர் அவதரித்த தினமாகும். மக்கள் விரதம் அனுட்டிப்பர்.

ஆவணிமாதம் ரோகிணி நட்சத்திரத்தில் கோகுலாஷ்டமி தினம் கொண்டாடப்படும் . கண்ணன் தங்கள் இல்லங்களில் பிறந்ததாகக் கருதி கிருஷ்ண ஜயந்தியாக அனுட்டிப்பர். கண்ணன் பற்றிய துதிப்பாடல்கள் பாடப்படும். இந்நாளில் விரதமிருந்து வழிபாட்டில் ஈடுபடுவர் .

வைகுண்ட ஏகாதசி ஒவ்வொரு ஆண்டும் மார்கழி வளர்பிறையில் வரும் ஏகாதசியில் வைணவர்கள் மற்றும் இந்துக்கள் அனைவரும் விரதமிருந்து வழிபடுவர். அன்று சொர்க்க வாயில் திறக்கப்படும் என்பது ஐதீகம் . இவ்வைபவம் ஸ்ரீரங்கத்தில் சிறப்பாக நிகழும்.

புரட்டாதி சனிக்கிழமை வெங்கடாசலபதிக்குரிய நாளாகும். இம்மாதம் முழுவதும் விரதமிருந்து சனிக்கிழமைகளில் விசேட பூசை செய்து வெங்கடேசப் பெருமாளுக்கு மாவிளக்கு ஏற்றி வணங்குவர். பொங்கல் படைத்து வழிபடுவர். பூசை முடிந்ததும் துளஸி தீர்த்தம் அருந்தி விரதத்தை முடிப்பர்.

வைணவத்தில் பஞ்சசம்ஸ்கார வழிபாடுகளான முத்திரை தரித்தல் , திருமண்காப்பு, தாஸ்ய நாமம் சூடுதல், திருமந்திர உபதேசம், திருவாதாரணம் என்பன குறிப்பிடத்தக்கன. வைணவ முறைப்படி மோட்சத்தை அடைய விரும்புகின்றவர்கள் அறிய வேண்டிய இரகசியங்கள் திருமந்திரம், துவைதம், சரசுலோகம் என்பனவாகும் .

கோயில் கட்டி விக்கிரகங்களை தாபித்து வழிபடுதல் இறுதி இலட்சியத்தையடைய பக்தன் முயற்சி செய்தல் வேண்டும் . வைணவத்தின் பக்தி நெறி உன்னத இடத்தைப் பெறுகின்றது.

**(07 புள்ளிகள்)**

**(இ) அவதாரச் சிறப்பு**

விஷ்ணுவின் விபவவடிவங்களே அவதாரங்கள். பகவத்கீதையில் அவதார மகிமை பற்றி கிருஷ்ணன் உபதேசிக்கின்றான். இவற்றுள் பல அவதாரங்களைப் பற்றி ஆகமங்கள் குறிப்பிடுகின்றன. அவற்றுள் பத்து அவதாரங்கள் சிறப்பானவை மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனம், பரசுராமன், இராமன், பலராமன், கிருஷ்ணன், கல்கி என்பன. பகவத் கீதை கூறும்

அவதாரதத்துவத்தில் ஸ்ரீகிருஷ்ணன் பின்வருமாறு கூறுவதாக உள்ளது .

“எப்பொழுதெல்லாம் தர்மம் தாழ்ந்து அதர்மம் மேலோங்கி நிற்கின்றதோ அப்போது நான் ஒவ்வொரு-யுகத்திலும் நல்லவர்களைக் காக்கவும் தீயவர்களை அழிக்கவும் அவதரிப்பேன்”எனக் கூறுகின்றான். அவதாரதத்துவம் பக்தி நெறி வளம்பெற உதவியுள்ளது .

**(06 புள்ளிகள்)**

**(மொத்தம் 07 +07+06=20புள்ளிகள்)**

**07. வேதாந்த தத்துவ வளர்ச்சியில் மத்துவரின் துவைத வேதாந்தத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை விளக்கிக் கூறுக.**

கி.பி. 13ம் நூற்றாண்டைச் சேர்ந்த மத்துவர் துவைத வேதாந்தக் கோட்பாட்டை நிறுவியவர். தமது கோட்பாட்டை நிறுவ பிரஸ்தானத்திரயங்களான வேதாந்த சூத்திரம், தச உபநிடங்கள், பகவத்கீதை என்பனவற்றுக்கு உரை எழுதியவர். இவர் கையாண்ட பிரமாணங்கள் காண்டல், கருதல், உரை ஆகிய மூன்றுமாகும்.
சங்கரர் , இராமானுஜர் அத்வைத கோட்பாடுகளை உள்வாங்கி துவைதக் கோட்பாட்டை நிறுவியவர்
உள்பொருள் மூன்றாயினும் அவை தம்மிடையே என்றும் வேறுபாடுடையவை என்ற நிலையில் தமது கோட்பாட்டை நிலைநிறுத்தியமை.
வைணவமதச் சார்புடையதாக தமது வேதாந்தத்தை நிறுவியமை.
முத்திக்கோட்பாடு பற்றி புதிய கருத்து நிலையை முன்வைத்தமை.
துவைதம் என்றால் இரண்டு என்று பொருள். அவை இறைவனும் ஆன்மாவும் ஆகும்.
இவை இரண்டும் இரண்டு என்ற நிலையினின்றும் நீங்கி ஒன்று என்ற நிலையை ஒருபோதும் அடைவதில்லை.
எப்பொழுதும் இரண்டும் இரண்டுதான் – இதுவே துவைத கோட்பாடு.
மத்துவர் பன்மைவாதி– உள் பொருள்கள் பல– இறைவன், சீவன், சடம் ஆகியன உண்மைப் பொருள்கள்.
இவை நிரந்தரமானவை; என்றும் இருப்பவை இவற்றுக்கிடையேயுள்ள வேறுபாடுகளும் பேதங்களும் நிரந்தரமானவை– ஐவகைப் பேதங்களை குறிப்பிடுகிறார். சீவஈஸ்வரபேதம், சடஈஸ்வரபேதம்; சீவசடபேதம் ; சீவபரஸ்பரபேதம் ; சடபரஸ்பரபேதம்.
இறைவன் ஒருவனே சுதந்திரமான உள்பொருள். மற்றைய உள்பொருளாகிய ஆன்மாக்களும் சடப்பொருள்களும் பர சுதந்திரமானவை (சுதந்திரமற்றவை)
பிரமம் சகுண பிரமத்தை மத்துவர் முதன்மைப்படுத்துகின்றார். பிரமம் எல்லாப்பொருள்களிலும் உள்ளீடாக அமைவதுடன் அவைகளின் செயற்பாட்டிற்கு வழிகாட்டியாகவும் உள்ளது.
மகாவிஷ்ணுவே சர்வ வல்லமை படைத்த ஈஸ்வரன். அவர் ஆன்மாக்களை பிறவித் துன்பங்களினின்றும் நீங்கி முத்தி பெறுதற் பொருட்டு படைத்தல் , காத்தல், அழித்தல், ஆகிய முத்தொழில்களையும் செய்கிறார்.
ஆன்மாவின் அறியாமைக்குக் காரணம் இறைவனின் பேராற்றல் தன்மையெனக் கருதப்படும் மாயையாகும் .
ஆன்மாக்களின் அறிவுக்கும் விடுதலைக்கும் காரணமாக அமைவது பிரமம்.
ஆன்மாக்கள் பல ,எண்ணிக்கையற்றவை.
ஆன்மா பிரமத்தின் தன்மைகள் பலவற்றைப் பெற்றிருக்கிறது. ஆனால் கடவுளுக்கு சமமானதல்ல. கண்ணால் காணமுடியாது. நல்வினை தீவினைகளுக்கேற்ப உடல்களை எடுத்து உலகில் வாழ்கின்றது. இதற்கு இறைவனின் கருணை தேவை.
ஆன்மாக்கள் மூன்று வகை நித்தியமுத்தர்கள், முத்தர்கள், பந்தப்பட்ட சீவன்கள்.
வீடுபேறடையும் தகுதி இல்லாதவர்கள் பற்றியும் கூறப்படுகின்றது.
ஆன்ம விடுதலை ஆன்மாக்களின் முக்குண அடிப்படையிலும் தீர்மானிக்கப்படுகின்றன
உலகம் உண்மையான நிலையான பொருள்.
முத்திநிலை : ஆன்மா முத்தியடைய இறைவனின் அருள் தேவை.
ஞானம் பக்தி என்பன மோட்சம் அடைவதற்கான வழிகள். முத்திநிலையில் ஆன்மா பேரின்பத்தை அனுபவிக்குமே தவிர பிரம்மத்துடன் இரண்டரக்கலப்பதில்லை.

**(20 புள்ளிகள் )**

**08. மேல்வருவனவற்றுள் எவையேனும் நான்கிற்குச் சிறுகுறிப்பு எழுதுக**

**(அ) மகாபாரதம்**

இதிகாசங்களில் ஒன்றாகிய மகாபாரதம் கலைக்களஞ்சியமாகவும் ஐந்தாம் வேதமாகவும் போற்றப்படுகின்றது. பாண்டவர் கௌரவர் போர் பிரதான கதைக்கருவாகும். 18 பருவங்களைக் கொண்டது. உபதேச முறையானது கி.மு6 ஆம் நூற்றாண்டில் எழுந்ததாகக் கருதப்படுகின்றது. விஷ்ணுவை முதன்மைப்படுத்துவது. சிவன் போற்றப்படுகின்றார். அறுவகைச் சமய நெறிகளின் மூலங்களை அறிய உதவுவது .

உலகியல் சார்பும் தெய்வீக நம்பிக்கையும் கலந்த நூல். இந்துமதத்தின் முக்கிய அம்சங்கள் பல எடுத்துக்கூறப்பட்டுள்ளன. அரச தர்மம், மக்கள் ஒழுக்கம், அறத்தால் வருவதே உண்மை வெற்றி ஆகியன குறிப்பிடப்படுகின்றன

குருகுலமரபு இல்லறவாழ்வு முதலிய தர்மவிடயங்கள் மகாபாரதத்தில் இடம்பெறுகின்றன. பகவத்கீதையைக் கொண்டுள்ளது.

**(05 புள்ளிகள் )**

**(ஆ) நடராஜவடிவம்**

சிவாலயங்களில் சிறப்பிடம் பெறும் நடராஜவடிவம் கலையெழில்மிக்க நடனக் கோலத்துடன் விளங்குவது. காண்போர் உள்ளத்தை கவரவல்லது. இந்தியாவில் மாத்திரமின்றி உலகளாவிய நிலையில் சிறப்புபெற்ற வடிவமாகும். உத்தமதசதால அளவு பிரமாணத்தில் வடிக்கப்படுவது. உன்னதமான சமய தத்துவச் சிறப்பு மிக்கவடிவமாகும்.

ஊன்றிய திருவடி (வலது) தூக்கிய திருவடி ( இடது) வீசுகரம் (இடது) அபயகரம் மற்றும் உடுக்கை அக்கினி ஆகிய பொருட்கள் திருக்கரங்களில் விளங்குவன.

சடாமுடி, கங்கை , பிறை , அரவாபரணம்,புலியாடை ஆகியவற்றுடன் கூடியது. ஐந்தொழில் தத்துவம் நமசி-வாய என்பதன் தத்துவச் சிறப்புடன் கூடியது. உலக இயக்கத்தை இவ்வடிவம் பிரதிபலிக்கின்றது. தேவாரம், திருவாசகம், திருமந்திரம், போன்ற நூல்களில் போற்றப்படும் வடிவமாகும்.

நடராஜ விக்கிரகத்தின் கலையெழிலை கலாயோகி ஆனந்த குமாரசு வாமி தமது “சிவானந்த நடனம்”என்ற நூலில் போற்றியுள்ளார்.

ஆலயங்களில் ஆனி உத்திரம் , மார்கழிமாத ஆருத்திரா தரிசனம் ஆகியவை
நடராஜரின் சிறப்பு வழிப்பாட்டிற்குரிய நாட்கள்
சோழப் பெருமன்னர் ஆடல் வல்லான் எனப் போற்றியுள்ளார்.

**(05 பள்ளிகள் )**

**(இ) தாயுமான சுவாமிகள்**

விஜய நகர நாயக்கர் மன்னராட்சிக் காலத்தில் தோன்றிய சமய ஞானியர்களுள் தாயுமானவர் குறிப்பிட-த்தக்கவர். இவரது காலம் 16 ஆம் 17 ஆம் நூற்றண்டாக அறிஞர் கருதுவர். தமிழ்நாடு வேதாரண்யத்தில் பிறந்தவர் தாயுமானவர் சுவாமி அருளால் பிறந்ததினால் தாயுமானவர் என்ற பெயரைப் பெற்றார்.

இவரை இல்லற வாழ்வில் ஈடுப்படுத்திய போதிலும் சமயவாழ்விலேயே நாட்டங் கொண்டு உலகியல் வாழ்வை வெறுத்து துறவு வாழ்வை பூண்டவர். தலயாத்திரை மேற்கொண்டு இறையருள். பெற்றவர் அனுபூதி நிலையினை அடைந்தவர்.

இவர் பாடிய பாடல்களுள் 687 பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. திருவருள் விலாசம், பரசிவ வணக்கம், பரிபூரணானந்தம், மௌன குருவணக்கம், பராபரக்கண்ணி, பைங்கிளிக்கண்ணி, ஆனந்தக் களிப்பு என்றவாறாக 56 பகுதிகளாக அமைந்துள்ளன.
தேவாரமுதலிகள், மாணிக்கவாசகர், திருமூலர் ஆகியோரது கருத்துக்களை தமது பாடல்களில் உள்வாங்கியுள்ளார் .
தாம்பிறந்து வளர்ந்த சைவசமயத்தில் நின்றவாறு உலக சமயங்களை ஆராய்ந்தவர். எல்லா சமயங்களுக்கும் அப்பாற்பட்டவர் இறைவன் என்ற தெளிவைப் பெற்றவர்.
இறைதத்துவம் ,சமரச உடன்பாடு என்பவற்றை தமது பாடல்களில் பாடியுள்ளார். சைவ சித்தாந்த சிந்தனை–களுக்கு மதிப்பளித்து அவ்வுண்மைகளை ஏற்றவர்.
தாயுமானவர் கூற்றுக்கள் வேதாந்த சித்தாந்த சமரச சன்மார்க்க நெறியைக் காட்டி நிற்பன.
பரசிவ வணக்கம் அவரது சமரச கொள்கைக்கு அடிப்படை. இறுதியில் 'சுத்தாத்துவித சித்தாந்த சமயமே' உண்மை எனக் குறிப்பிட்டுள்ளார் . அதனை அடைய அனைவரும் வாருங்கள் என உலகத்தார்க்கு அழைப்பு விடுத்தவர்.

(05 புள்ளிகள்)

**(ஈ) உபநிடங்களில் அறம் :-**

உபநிடதங்களில் மக்கள் வாழ்வு மேனிலை அடைவதற்கான பல அறங்கள் கூறப்படுகின்றன.
உபநிடத மகாவாக்கியங்கள் அனைவரையும் சமநோக்குடன் நோக்கும் உயர்நிலை அறத்தைப் போதிக்கின்றன.
அனைவரிலும் தெய்விகம் உண்டு; அனைவரையும் நேசி ;அனைவரிடமும் அன்பாயிரு எனும் உயர் அறப்போதனையே உபநிடங்களின் முக்கிய நோக்கமாகும்.
உயர்ந்த அறப்பண்புகள் தைத்திரிய உபநிடத்தில் உள்ளன.
உண்மைபேசு; தர்மவழியில் நட; சத்தியத்திலிருந்து நழுவாதே ; தர்மத்தினின்றும் நழுவக் கூடாது .
பெருமையுள்ளவற்றை போற்றுவதில் தவறக்கூடாது , தாயை தெய்வமாகக் கொண்டிரு, தந்தையை தெய்வமாகப் போற்றுக, குருவைதெய்வமாகப் போற்றுக , விருந்தினரை தெய்வமாகப் போற்றுக.
போன்ற உபநிடத அறஞ்சார்ந்த உபதேசங்கள் மனித வாழ்வை செம்மைப்படுத்த வல்லன.

(05 புள்ளிகள்)

**(உ) நல்லூர் கந்தசுவாமி கோவில்**

யாழ்ப்பாணத்தில் புகழ்பெற்ற முருகன் ஆலயமாக விளங்கும் நல்லூர் கந்தசுவாமி கோவில் வரலாற்றுச் சிறப்பு மிக்கது. உலகளாவிய பெருமை பெற்றது
யாழ்ப்பாணத்து அரசர்களால் போற்றப்பட்ட இக்கோயில் செண்பகப் பெருமாளின் படையெடுப்பால் அழிக்கப்பட்டு மீண்டும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது.
இக்கோயில் சிங்கைப் பரராச சேகரன் காலத்தில் மேலும் சிறப்புப் பெற்றது.
இக்கோயிலை நடுவாகக் கொண்டு நான்கு கோயில்கள் அமைக்கப்பட்டுள்ள சிறப்புடன் இக்கோயில் உள்ளது.
பழைமை வாய்ந்த இக்கோயிலை போர்த்துகேயர் முற்றாக அழித்தனர். பின்னர் ஒல்லாந்தர் காலத்தில் இக்கோயில் மீளமைக்கப்பட்டு இன்று அருள் பொங்கும் பொலிவுடன் திகழ்கின்றது.

காலந்தவறாது நித்திய, நைமித்திய பூசை வழிபாடுகள் இக்கோயிலில் நிகழ்வது சிறப்பம்சமாகும்.
கோயிலில் இன்று தெற்கிலும் வடக்கிலும் கிழக்கிலும் வானளாவ உயர்ந்து விளங்கும் இராஜ கோபுரங்கள் காண்போர் மனதைக் கவரவல்லன.
ஆவணிமாத அமாவாசையை தீர்த்த அந்தமாகக் கொண்டு இருபத்தைந்து நாட்கள் வருடாந்த மகோற்சவம் நடைபெறுகின்றது. பெரும் எண்ணிக்கையான மக்கள் கூடுவர். தேர்த்திருவிழா மிகவும் அற்புதமானது.
பலபெரியோர்கள் இக்கோயில் மீது பிரபந்தங்கள் பாடியுள்ளனர். ஆறுமுக நாவலர் இக்கோயிலில் புராண படனம் நிகழ்த்தியவர்.
கருவறையில் வேற்பெருமான் எழுந்தருளியுள்ளார்.
ஷண்முகப் பெருமாள் மிகவும் அழகுமிக்க விக்கிரமாகும் .
இலங்கைவாழ் இந்துக்களாலும் உலகளாவிய நிலையில் வாழும் இந்துக்களாலும் பக்தி சிரத்தையுடன் போற்றி வணங்கப்படும் தெய்வமாக விளங்குபவர் நல்லூர்க் கந்தன் ஆவார்.

(05 புள்ளிகள் )

**(ஊ) மேற்குல நாடுகளில் இந்துப் பண்பாடு.**

மேற்குலகநாடுகளின் வரிசையில் இங்கிலாந்து (லண்டன்) பிரான்ஸ், கனடா, ஜேர்மனி, ஹவாய் தீவுகள்,அமெரிக்கா, நோர்வே, சுவீடன் , சுவிற்சலாந்து ,டென்மார்க் ஆகியவை முக்கியமானவை.
எமது நாட்டு இந்துக்கள் போர், வர்த்தகம், திருமணம், தொழில் வாய்ப்பு காரணமாக மேற்குலக நாடுகளுக்குச் சென்று குடியேறினர்.
இந்துக்கள் குடியேறிய நாடுகளில் தங்கள் பண்பாட்டை நிலைநிறுத்தும் முகமாக முருகன், அம்மன், விநாயகர், சிவன் ஆகிய கடவுளர்க்கான கோயில்கள் சமய நிறுவனங்கள் அமைத்து அவற்றின் வழி இந்து சமயத்தை வளம்படுத்தி வருகின்றனர்.
இலண்டனில் 16 இந்துக் கோயில்கள் உள்ளன. மற்றும் இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கம் உள்ளது.
கனடாவில் ரொரண்டோமாநிலத்தில் 5 கோயில்கள் உள.
மொன்றியலில் 3 இந்துக் கோயில்கள் உள .
சுவிற்சலாந்தில் 13 இந்து ஆலயங்கள் உள.
அமெரிக்காவில் பெருமளவிலான இந்துக் கோயில்கள் உள்ளன.
ஆகம முறையில் வழிபாடு சிறப்புமிக்க சிற்ப வேலைப்பாடு ஆலயங்களுக்குப் பெருமை சேர்ப்பன.
ஹவாய் தீவில் யோகர் சுவாமிகளின் சீடரான சிவசுப்பிரமணிய சுவாமிகளால் சிவன் கோவில் தாபிக்கப்பட்டு உலகப் பிரசித்தி பெற்றுள்ளது.
இந்து ஆலயங்களிலும், சமய நிறுவனங்களிலும் சமய வகுப்புக்கள், பரத நாட்டியம், இசைப்பயிற்சி, பண்ணிசை வகுப்புக்கள் நடைபெற்று இந்துப் பண்பாட்டை வளம்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது .
ஆலயங்களில் கும்பாபிஷேகம், மகோற்சவம் நடைபெற்று வருகின்றன.
சைவமகாநாடு ,சமய சொற்பொழிவுகள் நடைபெறுகின்றன.
இவ்வாறாக மேற்குலக நாடுகளில் இந்துப் பண்பாடு சிறப்புற்று விளங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 05+05+05 +05=20புள்ளிகள்)